தமிழச்சி தங்கபாண்டியன்

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்

# கடந்த நிதியாண்டில் GST வசூல் குறித்து தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி கேள்வி ?

அ) 2022 - 23ஆம் நிதி ஆண்டில் GST வசூல், 17 லட்சத்து, 50 ஆயிரம் கோடி ஆனால், GST வசூலை பாதிக்கும் பல்வேறு காரணிகளால் உண்மையான GST வசூலானது மிகவும் குறைவாக உள்ளது என்பது உண்மையா?

ஆ) அப்படியானால் அதன் விவரங்களும் அதற்கான காரணங்களும் என்ன?

இ) GST தொடங்கப்பட்டதிலிருந்து சுமார் 10 லட்சம் நிறுவனங்களிடம் இருந்து, 10 லட்சம் கோடிக்கும் அதிகமான GST விதிகள் இன்னும் பின்பற்றப்படாமல் நிலுவையில் உள்ளது என்பது உண்மையா?

ஈ) அப்படியானால் அதன் விவரங்கள் என்ன?

உ) 31, மார்ச், 2023 வரை GST வரி, நிலுவையில் உள்ள நிறுவனங்களிடம் இருந்து, நிலுவைத் தொகையை வசூலிப்பதற்கு, அரசு எடுக்கப்பட்ட/ எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன?

**மத்திய நிதித் துறை இணை அமைச்சர் திரு. பங்கஜ் சவுத்ரி அவர்களின் பதில்**

கேள்வி: (அ) முதல் (இ) வரை: இல்லை மேடம்.

2020 - 21, 2021 - 22 மற்றும் 2022 - 23ம் நிதியாண்டுகளுக்கான, பொருட்கள் மற்றும் சேவை (உள்நாட்டு+ இறக்குமதி) மொத்த சரக்கு மற்றும் சேவை வரி வசூல் விவரங்கள் பின்வருமாறு:

2020 - 21ஆம் நிதியாண்டில் வரி வசூல் ரூ. 11 லட்சத்து, 36 ஆயிரத்து, 734 கோடி. சராசரி மாத வசூல் ரூ. 94 ஆயிரத்து, 734 கோடி.

2021 - 22ஆம் நிதி ஆண்டில், வரி வசூல் ரூ. 14 லட்சத்து, 83 ஆயிரத்து, 291 கோடி. சராசரி மாத வசூல் ஒரு லட்சத்து, 23 ஆயிரத்து, 608 கோடி.

2022 - 23ஆம் நிதியாண்டில் வரி வசூல் 18 லட்சத்து, 7 ஆயிரத்து, 680 கோடி. சராசரி மாத வசூல் ஒரு லட்சத்து, 50 ஆயிரத்து, 640 கோடி.

2021 - 22 மற்றும் 2022 - 24ம் நிதியாண்டிற்கான மாதாந்திர சராசரி மொத்த GST வசூல், முறையே 30 சதவீதம் மற்றும் 22 சதவீதம் வசூலில் வளர்ச்சியை காட்டியுள்ளது.

GST சுயமதிப்பீட்டின் அடிப்படையில் செலுத்தப்படுகிறது. மத்திய மற்றும் மாநில அளவில் உள்ள வரி நிர்வாகமானது, GST செலுத்தப்படாத மற்றும் குறுகிய ஊதியம் தொடர்பான வழக்குகளுக்கு எதிராக, நடவடிக்கை எடுக்க, அதிகாரம் பெற்றுள்ளது. அத்தகைய வழக்குகளை கண்டறிவதும், செலுத்தப்படாத அல்லது குறைவாக செலுத்தப்பட்டவர்களிடம் இருந்து வரிப்பணத்தை மீட்டெடுப்பது என்பது தொடர்ச்சியான செயல் முறையாகும்.

GST கவுன்சிலிங் பரிந்துரையின்படி, GSTயில் அரசு பல்வேறு சீர்திருத்தங்களை கொண்டு வருகிறது. இந்த நடவடிக்கைகள் GSTயானது, நிறுவனங்களுடனான இணக்கத்தை மேம்படுத்தி, வரி வசூலை அதிகரிக்கும். இது, பின் வருவனவற்றின் அடிப்படையில் செயல்படும்:

1) GST வரி விதிப்பின் கட்டமைப்பை சரி செய்வதற்கான விகிதங்களின் அளவுதிருத்தம் மற்றும் வரிவிலக்கு போன்ற மாற்றங்கள்.

2) இணையம் வழியாக பில்லை கட்டாயமாக்குதல், தொடர் உள்ளீட்டு வரிகடன் என்கிற (ITC) வரி இணக்கத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள், மின் விலைப்பட்டியல் கட்டாயப்படுத்துதல், செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரம் சார்ந்த பகுப்பாய்வுகளை பயன்படுத்துதல், பதிவு செய்ய ஆதார் அங்கீகாரம், வரி தாக்கல் செய்யாதவர்கள் மீது அளவீடு செய்தல், வரி செலுத்துவதை நிறுத்தியவர்கள், அபாயகரமான வரி செலுத்துவோர் மீதான இலக்கிற்கு ஏற்ப, மதிப்பீடு அடிப்படையிலான நடவடிக்கைகளை, இணையவழி பில்களை பாஸ்ட் டேக்குடன் ஒருங்கிணைப்பது போன்றவை.

3) இணையம் வாயிலான பகுப்பாய்வு கருவிகள் மற்றும் அதன் மூலம் உருவாக்கப்படும் சிவப்புக் கொடி அறிக்கைகள் மூலம், பகிரப்படுகின்ற தகவல் மூலம், வரி ஏய்ப்பு செய்பவர்கள் மீது மத்திய, மாநில வருமான வரித்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

*****